அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். அதை இந்த அரசு 'கமிஷனர் பார் லேண்ட் அட்மினிஸ்ட்ரேசன்' அவர்களுக்கு அனுப்பி, அவருடைய கருத்தையும் கேட்டு இருக்கிறது. அது கிடைத்த பிறகு, அது குறித்து அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

கோயில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை.

* 2607 திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் தொகுதியில் கோயில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்காக கூட்டப்பட்டு இருக்கின்ற இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது, மேதகு ஆளுநர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தபோது "10 லட்சம் விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகளும், இன்றைக்கு வாடுவதைப் பார்க்கிறேன், அதிலும் குறிப்பாக, ஒருபோக சாகுபடி, குறுவை சாகுபடிக்கு 350 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டு இருப்பதை நான் உணர்கிறேன், தொடர்ந்து விவசாயத்தை நம்பியிருக்க முடியாது இந்த மாவட்டம்'' என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஊரகத் தொழில் துறை வேறு ஏதேனும் திட்டங்களை கைவசம் வைத்திருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அரசின் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேனே ஒழிய, மாண்புமிகு உறுப்பினர் முன்வந்தால், அந்தப் பகுதியிலே தொழில்பேட்டை தொடங்

குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம். தமிழ்நாட்டில் தொழில் முனைவோருடைய தேவைக்கு ஏற்ப, தொழிற் பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஒரு இடத்தில் குறைந்த பட்சம் 20 பேர்கள் தொழில் முனைவோர்கள் இருந்தால், அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும். தொழில்பேட்டை அமைப்பதற்கான வசதிகளான, நில வசதி, போக்குவரத்து இணைப்பு, தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, 20 பேர்கள் முன்வந்தால், அவர்களுக்குத் தேவைப் படுகிற இடத்தில், அந்தத் தொழில்பேட்டைகளைக் கட்டித் தருவதற்கு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் முன் வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு 20 பேர்கள் அல்ல, 40 பேர்கள் தயாராக இருந்தாலும், மாவட்டத் தொழில் வளர்ச்சி மையத்தில், அதாவது டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரிஸ் சென்டர்களை அணுகுகின்றபோது, அவர்கள் சரிவர விவரங்களையும், ஒத்துழைப்பையும் கொடுக்காததால், அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஆந்திர மாநிலத்தில் பருத்தி சாகுபடியாளர்கள் பலர் கடந்த ஆண்டு தற்கொலை செய்து கொண்டதைப் போல, தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளும் கடந்த ஆண்டு அங்கே 100-க்கு 70 சதவீதம் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து இந்த அரசு செயல்பட வேண்டும் என்று சொல்லி, இங்கே ஒரு குரோத் சென்டரைத் தந்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா என்பதையும் உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையிலே ஏற்கெனவே நன்றி சொல்லக்கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நன்றியே சொல்லக்கூடாது என்று சொல்ல வில்லை. கேள்வி நேரத்திலே இப்படிச் சொல்ல வேண்டாம் என்று சொன்னார். பொதுப்படையாக சில நேரங் களில் நாங்கள் செய்கிற காரியத்திற்கு மாண்புமிகு உறுப் பினர்கள் நன்றி சொல்வது வழக்கம். ஆகையினாலே, ஒட்டு மொத்தமாக அதை எடுத்துக்கொள்ளக்கூடாது.

(சிரிப்பு) 10-30 மணி